

மதுரை மாவட்டம் நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு, மதுரை செல்லூர் இணைப்புப்பாலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார்கள். உடன் மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், சட்டமன்ற உறுப்பினர், பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சம்மன் - சட்ட விரோதம்!

## அமலாக்கத் துறைக்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு!

புதுடெல்லி, நவ.25-

மணல் குவாரி விவகாரத்தில் 10 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியதற்கு எதிராக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மணல் குவாரிகளில், அரசு நிர்ணயித்த அளவைவிட கூடுதலாக மணல் விற்பனை செய்ததாகவும், மணல் ஒப்பந்த குவாரிகளில் வந்த வருமானத்தை சட்டவிரோதமாக பரிமாற்றம் செய்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்திருந்தது.

இதையடுத்து சட்டவிராத பணப் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த செப்டம்பர் 12ம் தேதி ஒரே நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முத்துபட்டினத்தை சேர்ந்த தொழிலதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், ரத்தினத்தின் உறவினர் கோவிந்தன், மணல் குவாரி அதிபர் கரிகாலன் ஆகியோரது வீடுகளில் சோதனை மேற்கொண்டனர்.

### மணல் குவாரி

இதேபோல் பொதுப்பணித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர் திலகம், நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா ஆகியோருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் எழிலகத்தில் உள்ள நீர்வளத்துறை அலுவலகம் என மொத்தம் 34 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர். இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்த இந்த சோதனையில், மணல் குவாரி அதிபர் ராமச்சந்திரன், திண்டுக்கல் ரத்தினம், கரிகாலன் மற்றும் நீர்வளத் துறை அதிகாரிகள் வீடுகளில் இருந்து கணக்கில் வராத பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து ஆவணங்கள், ரூ.12.82 கோடி ரொக்கப்பணம், ரூ.58.86 லட்சம் மதிப்புள்ள 1024 கிராம் தங்க நகைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

### அமலாக்கத்துறை

இந்த சோதனையை தொடர்ந்து 10 மாவட்ட ஆட்சியர்கள், நீர்வளத் துறை முதன்மை பொறியாளர் முத்தையா, ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை பொறியாளர் திலகம் ஆகியோரை விசாரணைக்கு ஆஜராகக் கூறி அமலாக்கத் துறை சார்பில் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. இந்த சம்மனை தொடர்ந்து நீர்வளத்துறை முதன்மை பொறியாளர் முத்தையா நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் சில முக்கிய ஆவணங்களுடன் நேரில் ஆஜரானார்.

இந்த பின்னணியில் மாவட்ட ஆட்சியர்களுக்கு சம்மன் அனுப்பியதை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த மனுவில் சட்டவிராத பணப்பரிமாற்றத் தடை சட்டத்தில் கனிமவள சட்டம் சேர்க்கப்படாத நிலையில் மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் அனுப்ப அமலாக்கத்துறைக்கு அதிகார வரம்பு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாநில அரசு அதிகாரிகளை துன்புறுத்தும் நோக்கிலும், அரசு நிர்வாகத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கிலும், அமலாக்கத்துறை செயல்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு தலைமை! கண்ணிகை ஸ்டாலின் முன்னிலை!

# சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் டி.எஸ். ராஜா வேண்டுகோள்!

சென்னை, நவ.25-

சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் டி.எஸ். ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பாக கொண்டாடுவது பற்றியும், மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா குறித்தும் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.11.2023) மாலை 6.00 மணியளவில் காம்தார் நகர் 1வது தெரு, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாநில துணைச் செயலாளர் கண்ணிகை ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார்.

ஆகவே இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட அயலக அணியின் தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்டக் கழக அயலக அணி அமைப்பாளர் டி.எஸ்.ராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

இ–சேவை மையம், பார்வையாளர்கள், கணினி அறை கட்ட

# எம்.எல்.ஏ. தொகுதி நிதியில் இருந்து ரூ.21 லட்சம் செலவு செய்யலாம்!

## தமிழ்நாடு அரசு அனுமதி!

சென்னை, நவ.25-

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலாளர் செந்தில்குமார் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: 2023-24ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு ரூ.3 கோடி வீதம் ரூ.702 கோடிக்கு நிர்வாக அனுமதியும், அதில் 50 சதவீத தொகையான ரூ.351 கோடிக்கு நிதி விடுவிப்பு செய்து விரிவாக வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வெளியிடப்பட்டது. மீதமுள்ள 2வது மற்றும் இறுதி தவணைத் தொகை ரூ.351 கோடி நிதி விடுவிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

இந்த நிதியில், புதிய சட்டமன்ற தொகுதி அலுவலகங்களை 710 சதுர அடியில் கட்டுவதற்கான செலவினத்தை மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும், ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி அலுவலகங்கள் கட்டப்பட்டு, பொதுப் பணி துறையின் பராமரிப்பில் உள்ள 211 கட்டிடங்களில் கூடுதலாக இசேவை மையத்திற்கான அறை, பார்வையாளர்கள் காத்திருப்போர் கொட்டகை மற்றும் கணினி அறை ஆகியவற்றை கட்டுவதற்கு ஒருமுறை மட்டும் அனுமதிக்கலாம் என்று அரசு அனுமதி அளிக்கிறது.

இந்த 3 பணிகளையும் சேர்த்து 2000 சதுர அடி பரப்புக்கு மிகாமல் பொதுப் பணி துறையின் மதிப்பீட்டின்படி கட்டுவதற்கு ஒரு தொகுதிக்கு ரூ.21 லட்சம் வீதம் மொத்த தொகையான ரூ.44 கோடியே 31 லட்சம் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் 202324ம் நிதியாண்டுக்கு அவரவர் தொகுதிக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி ரூ.3 கோடியில் இருந்து நடப்பு நிதியாண்டிலேயே நடைமுறைப்படுத்த அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2023–24 அரைவைப் பருவத்திற்கு 2.50இலட்சம் மெட்ரிக்டன்கள் கரும்பு அரைவை இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கரும்பு அரைவை பணிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ , மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் ஜெ.மலர்விழி, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவர் சுஜாதா மகாலிங்கம், ஒன்றிய செயலாளர் எஸ்.. மகாலிங்கம், மோ.ரமேஷ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் ரூபாய்.37.22 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் உடற் பயிற்சிக் கூடங்களைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமை செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்க நிருவாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கேரள ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கு!

# பஞ்சாப் ஆளுநர் வழக்கின் தீர்ப்பை, கேரள ஆளுநர் படித்துப் பார்க்கவேண்டும்!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, நவ.25-

பஞ்சாப் ஆளுநர் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை படித்துப் பார்த்து கேரள ஆளுநர் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க வேண்டும் என, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மசோதாக்களுக்கு எப்போது ஒப்புதல் வழங்குவார் என்பது குறித்து ஆளுனர் தரப்பு 29 ஆம் தேதி பதிலளிக்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

Roll PKG

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், ஆளுநர்கள் மூலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர்கள் காலம் தாழ்த்தி வருகின்றனர். கேரள சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ள பல்வேறு சட்ட மசோதாக்களையும், அரசு உத்தரவுகளையும் கிடப்பில் போட்டுள்ள ஆளுநர் ஆரிப் முகமது கானுக்கு எதிராக, அம்மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, (gfx in) கேரள ஆளுநர் தரப்பில் ஒன்றிய அரசின் அட்டர்ணி ஜெனரல் ஆஜரானார். கேரள அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால், 8 மசோதாக்கள் நீண்ட நாள் நிலுவையில் உள்ளாதாக தெரிவித்தார். முதலமைச்சரும், அமைச்சர்களும் நேரில் விளக்கமளித்த பின்னரும் ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டிருப்பதாக குற்றம் சாட்டினார். அப்போது, தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு, பஞ்சாப் ஆளுநர் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை படித்து பார்த்து கேரள ஆளுநர் மசோதாக்கள் மீது முடிவு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். மேலும், மசோதாக்களுக்கு எப்போது ஒப்புதல் வழங்குவார் என்பது குறித்து ஆளுநர் தரப்பு வரும் 29 ஆம் தேதி பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கை நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

வாக்காளர் சரிபார்த்தல் பணியில்

# சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை!

சென்னை, நவ.25-

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலுக்கு இணங்க சென்னை மேற்கு மாவட்டத்தில் வாக்காளர் சரி பார்த்தல் பணி தீவிரமாக நடைபெறுகின்றது.

01.01.2024ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அண்ணாநகர், ஆயிரம்விளக்கு, சேப்பாக்கம்திருவல்லிக்கேணி ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கு புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர் நீக்கவும், திருத்தம் செய்யவும் 25.11.2023 மற்றும் 26.11.2023 ஆகிய இரண்டு நாட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை முதல் மாலை வரை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

ஆகவே தகுதி உள்ள புதிய வாக்காளர்களை சேர்க்கவும், தகுதி இல்லாத வாக்காளர்களை நீக்கவும் விடுபட்ட வாக்காளர்களுக்கும் இடம் மாறிய வாக்காளர்களுக்கும் புதிய வாக்காளர்களும் தங்களது பெயரை சேர்க்க, நீக்க, திருத்தங்களை செய்ய வடிவங்களை பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் உள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் பணியை சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தினர் ஈடுபட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

# சைதை கிழக்கு பகுதி கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## பகுதி செயலாளர் இரா.துரைராஜ் வேண்டுகோள்!

சென்னை, நவ.25-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் சார்பு மன்ற நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து வாக்காளர் சரிபார்க்கும் பணியிலும் புதிய வாக்காளர்கள் சேர்க்கவும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படியும் வருகிற 01.01.2024ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை 27.10.2023 அன்று வெளியிடப்பட்டதை அந்த அந்த வாக்கு சாவடி முகவர்களிடம் (PLA2) சரிபார்ப்புக்காக கொடுக்கப் பட்டுள்ளது மேலும் சிறப்பு முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் 25.11.2023 சனிக்கிழமை மற்றும் 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்கள் அந்த அந்த பகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் சிறப்பு முகாம் காலை 9.30 மணிக்கு தொடங்கி மாலை 5.30 மணிவரை நடைபெற உள்ளது.

இதனடிப்படையில் 2024ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு 18வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் மற்றும் இதுவரை வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்களின் பெயர்களையும் புதிதாக குடியேறிய வர்களின் பெயர்களையும் பட்டியலில் சேர்க்கவும் தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகள் மேற்க் கொள்ள வேண்டும் என சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள்,பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்வதாக சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது வார்டு குழு தலைவருமான இரா.துரை ராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை சிறையில் இருந்து விடுவிப்பு

# 12 தமிழக மீனவர்கள் சென்னை திரும்பினர்!

## அரசு சார்பில் வரவேற்பு!

சென்னை, நவ.25-

இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களில், 3வது கட்டமாக 12 மீனவர்கள் இலங்கையிலிருந்து நேற்று காலை சென்னை வந்தனர். தமிழ்நாட்டில் ராமேஸ்வரம், மண்டபம் கடல் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த, 64 தமிழ்நாடு மீனவர்களை இலங்கை கடற்படை கடந்த அக்டோபர் மாதத்தில் கைது செய்தது. இதையடுத்து, இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கை அரசு அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி, கடந்த சில நாட்களுக்கு முன்பு இலங்கை நீதிமன்றம் 63 மீனவர்களை விடுதலை செய்தது,

இந்நிலையில் விடுதலை செய்யப்பட்ட 63 தமிழக மீனவர்களில், 15 பேர் கடந்த 21ம் தேதி விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தொடர்ந்து நேற்று முன்தினம் 15 பேர் விமானத்தில் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இலங்கையில் இந்திய தூதரகம் பராமரிப்பில் இருந்த தமிழக மீனவர்கள் மேலும் 12 பேர் நேற்று காலை ஏர் இந்தியா பயணிகள் விமானத்தில் இலங்கையிலிருந்து சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களை சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாடு அரசு சார்பில், தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்றனர். பிறகு தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்திருந்த வாகனங்களில் அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இலங்கையில் இந்திய தூதரக பராமரிப்பில் இருக்கும் மேலும் 21 தமிழக மீனவர்கள், அடுத்த ஓரிரு தினங்களில் சென்னை அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.